டொயிஸ் வங்கி

குழுமம்

மட்டம் 21, **OGF** கோபுரம், **1A** மத்திய வீதி, கோல் பேஸ், கொழும்பு 2

தொலைபேசி : +94-11-2447062, தொலைநகல் : +94-11-2447067

நிதி அறிக்கைகள்

2023 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான அறிக்கைகள்

கூட்டுறவு ஆளுகை

முகாமைத்துவ சபை

நிறுவனத்தின் நலன்களுக்கென பேண்தகு தன்மையுள்ள பெறுமதியை உருவாக்கும் நோக்கத்துடன் டொயிஷ் முகாமைத்துவ சபையானது சட்டம், கூட்டிணைப்பு விதிகள் மற்றும் முகாமைத்துவச் சபைக்கான குறிப்பு விதிமுறைகள் ஆகியவற்றிற்கு அமைவாக நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ளது. பங்குதாரர்கள், ஊழியர்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய பங்காளிகளின் நலன்களை அது கவனத்திற்கொள்கின்றது. வங்கியின் வர்த்தக முகாமைத்துவத்திற்காக முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் கூட்டாகப் பொறுப்புக்கூற வேண்டும். முகாமைத்துவச் சபையானது, குழும முகாமைத்துவச் சபை என்ற முறையில், அனைத்து குழும கம்பனிகள் மீது பொது நிருவாகத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே சீரான வழிகாட்டுதல்களுக்கு அமைய, டொயிஷ் வங்கிக் குழுமத்தை முகாமைத்துவம் செய்கின்றது

முகாமைத்துவச் சபையானது சட்டம் மற்றும் அதன் கூட்டிணைப்பு விதிகளுடாக குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சகல விடயங்கள் தொர்பிலும் தீர்மானங்களை எடுப்பதுடன், சட்ட ரீதியான தேவைப்பாடுகள் மற்றும் உள்ளக வழிகாட்டுதல்கள் (இணக்கப்பாடு) இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. அத்தோடு அது போதுமான உள்ளக வழிகாட்டு நெறிகள் மேம்படுத்தப்பட்டு அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கின்றது. முகாமைத்துவச் சபையின் கடமைகளில் முக்கியமாக வங்கியின் மூலோபாய முகாமைத்துவமும் வழிகாட்டுதலும், மூலவளங்களின் ஒதுக்கீடு, நிதிக் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல், கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் வர்த்தக நிறுவனத்தின் முறையான செயற்பாடு, நிறுவனத்தின் செயற்பாடுகளின் சூழல்சார் மற்றும் சமூகம்சார் அழுத்தங்களை முறையாக இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தலைப் போன்றே நிறுவனம் சார்ந்த நிருவாகம் என்பனவும் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவச் சபைக்குக் கீழான மட்டத்திலுள்ள சீரேஷ்ட முகாமைத்துவப் பதவி நியமனங்களை, குறிப்பாக, உலகளாவிய முக்கிய செயற்பாட்டுப் பதவிக்குரியவர்களின் நியமனங்களை, முகாமைத்துவச் சபை தீர்மானிக்கின்றது. குழுமத்தின் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு ஆட்களை நியமிக்கும்போது, முகாமைத்துவச் சபையானது பல்வகைத் தன்மையைக் கவனத்திற்கொள்வதுடன், முக்கியமாக பெண்களுக்குப் பொருத்தமானதொரு பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கும் முயல்கின்றது.

முகாமைத்துவச் சபை, நிறுவனத்தின் நன்மைக்காகவும் நம்பிக்கையின் அடிப்படையிலான ஒத்துழைப்பு முறையிலும் மேற்பார்வைச் சபையுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றது. முகாமைத்துவச் சபை குறிப்பாக, குழுமத்துடன் தொடர்புடைய மூலோபாயம், எதர்பார்க்கும் வர்த்தகக் கொள்கை. திட்டமிடல், வர்த்தக அபிவிருத்தி, இடர் நிலைமை, இடர் முகாமைத்துவம், ஊழியர் அபிவிருத்தி, நன்மதிப்பு மற்றும் இணக்கப்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து சிக்கல்கள் தொடர்பாக சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டல்களினால் விதித்துரைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பிற்குள் குறைந்தபட்ச அடிப்படையில் மேற்பார்வைச் சபைக்கு அறிக்கையிடுகின்றது. எமது முகாமைத்துவச் சபையின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விரிவான விபரங்கள் அதன் குறிப்பு விதிமுறைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. குறிப்பு விதிமுறைகளின் தற்போதைய பிரதியை எமது வலைத்தளத்தில் பிரவேசித்து (www.db.com/ir/en/documents.htm) பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்பார்வை சபை

டொய்ஸ் பாங் AG யின் மேற்பார்வை சபையானது, முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களை நியமிக்கின்றத மற்றும் பணிநீக்கம்செய்கின்றது, முகாமைத்துவ சபையினை மேற்பார்வை செய்து, ஆலோசனை வழங்குகின்றது மற்றும் வங்கிக்கான அடிப்படை முக்கியத்துவம் மிக்க தீர்மானங்களில் நேரடியாக ஈடுபடுகின்றது. மேற்பார்வையும் ஆலோசனையும் குறிப்பாக நிலைபெறு தன்மை விடயங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்பார்வை சபையானது, நம்பிக்கைப்பொறுப்பின் ஒத்துழைப்பு உறவிலும் அத்துடன், கம்பனியின் நலனுக்காகவும் முகாமைத்துவ சபையுடன் நெருக்கமாக ஒன்றிணைந்து பணியாற்றுகிறது. மேற்பார்வை சபையினதும், அதன் குழுக்களினதும் உள்ளக ஒழுங்கமைப்பும் அதேபோன்று அதன் உறுப்பினர்களுக்கான தேவைப்பாடுகளும் ஜேர்மன் வங்கித் தொழில் சட்டத்தின் (Kreditwesengesetz (KWG)) ஒழுங்குவிதிகள் மற்றும் ஜேர்மன் கூட்டுநிறுவன ஆளுகைக் கோவைப் பரிந்துரைகள் என்பவற்றுக்கு மாத்திரமன்றி குறிப்பான மேற்பார்வைத் தேவைப்படுத்தல்களுக்கும் உட்பட்டவையாகும். ஏனையவற்றுக்கு மத்தியில் ஜேர்மன் வங்கித் தொழில் சட்டம், நிறுவனங்களுக்கான ஊதிய கட்டளைச் சட்டம் (Institutsvergütungsverordnung (InstitutsVergV)), ஐரோப்பிய வங்கித்தொழில் அதிகாரசபை மற்றும் ஐரோப்பிய பிணையங்கள் மற்றும் சந்தைகள் அதிகாரசபை என்பவற்றின் வழிகாட்டல்கள் அத்துடன், எமது முன்மதிமிக்க அதிகாரி என்ற வகையில், ஐரோப்பிய மத்திய வங்கியின் நிர்வாக நடைமுறைகள் என்பவற்றின் மீதே அத்தகைய தேவைப்பாடுகள் தாபிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட விடயங்களில் ஜேர்மன் கூட்டுநிறுவன ஆளுகைக் கோவையின் பரிந்துரைகளில் இருந்து ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் வேறுபடலாம்.

தொழிலைக் கொண்டு நடத்தப்படுவதற்கு மேற்பார்வை சபையின் அனுமதியை வேண்டுகின்ற தொழில் வகைகள் டொய்ஸ் பாங் AG யின் அகவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்பார்வை சபையானது, அதன் அனுமதியை வேண்டுகின்ற மேலதிக கொடுக்கல்வாங்கல்களைக் குறித்துரைக்கலாம்.

மேற்பாவை சபையின் நடைமுறைகளும், மேற்பார்வை சபைக் குழுக்களின் பணிகள் மற்றும் நடைமுறைகள் என்பனவும் அவற்றின் உரிய ஆய்வெல்லையினுள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான தற்போதைய ஏற்புடைய பதிப்புகளில் இவை டொய்ஸ் பாங் யுபு யின் வலைத்தளத்தின் மீது (www.db.com/ir/em/documents.htm) வெளியிடப்பட்டுள்ளன. மேற்பாவைச் சபை கிரமமாக முகாமைத்துவ சபையின்றியும் கூடுகின்றது. இதற்கு மேலதிகமாக, ஊழியர்களின் பிரதிநிதிகளும், பங்குதாரர்களின் பிரதிநிதிகளும் பூ.வாங்க கலந்துரையாடல்களை கிரமமாக தனித்தனியாக நடத்துகின்றனர். கூட்டங்களின் எண்ணிக்கையும், அவற்றின் நிறைவேற்றலும் மேற்பார்வை சபையினதும் அதன் குழுக்களினதும் பணி பற்றிய விபரங்களுடன் சேர்த்து மேற்பார்வை சபையின் அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

மேற்பார்வை சபையின் தலைவர், மேற்பார்வை சபையின் முறையான தொழிற்பாட்டில் முக்கிய பங்காற்றுவதுடன், இதில் தலைமைத்துவ வகிபாகத்தையும் கொண்டுள்ளார். மேற்பார்வை சபையின் உள்ளக ஒழுங்கமைப்பு மற்றும் தொடர்பாடல்கள் மேற்பார்வை சபையினுள் பணி பற்றிய ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவ சபையுடனான மேற்பார்வை சபையின் இடைத் தொடர்பு என்பனவற்றுடன் தொடர்புடைய உள்ளக வழிகாட்டல்களையும், கோட்பாடுகளையும் அவர் வழங்கலாம். மேற்பார்வை சபையின் தலைவர் அவசியமான போது மேற்பார்வை சபை தொடர்புடைய விடயங்கள் பற்றி முதலீட்டாளர் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுடன், அத்தகைய கலந்துரையாடல்களின் சுருக்கம் பற்றி மேற்பார்வை சபைக்கு கிரமமாக அறிவிக்கின்றார். சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை விடயங்களையும் இவை உள்ளடக்குகின்றன. மேலும். கணக்காய்வுக் குழுவின் தலைவர் வெளிவாரி கணக்காய்வாளர் கூட்டங்களுடன் கிரமமான கலந்துரையாடல்களை நடத்துகின்றார்.

கூட்டங்களுக்கு இடையில், மேற்பார்வைக் குழுவின் தலைவர் மற்றும், மேற்பார்வை சபைக் குழுக்களின் தலைவர்கள், முகாமைத்துவ சபை உறுப்பினர்களுடன், குறிப்பாக முகாமைத்துவ சபைத் தலைவருடன் வழக்கமான தொடர்பைப் பேணுகிறார்கள், மேலும் அவர்களுடன் கலந்துரையாடுகிறார்கள். முக்கியமாக, டச் வங்கிக் குழுமத்துடன் தொடர்புடைய மூலோபாயம், எதிர்பார்க்கும் வர்த்தகக் கொள்கை, திட்டமிடல், வர்த்தக அபிவிருத்தி, இடர் நிலைமை, இடர் முகாமைத்துவம், ஊழியர் அபிவிருத்தி, நற்பெயர் மற்றும் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து சிக்கல்கள் சம்பந்தமாக சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டல்களினால் விதித்துரைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பிற்குள் குறைந்தபட்ச அடிப்படையில் மேற்பார்வைச் சபைக்கு அறிக்கையிடுகின்றது. மேலும், குழுமத்தின் கணக்காய்வு ஊடாக இனங்கண்டுகொள்ளப்பட்ட ஏதேனும் முரண்பாடுகள் எப்போதும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிவிக்கப்படுவதுடன் பாரிய முரண்பாடுகள் நிலவும் சந்தர்ப்பங்களில் அது பற்றி தாமதமின்றி அறிவிக்கப்படும். அதற்கமைய,முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுடன் தொடர்பாக ஏதேனும் பாரிய கண்டறிதல்கள் மேற்பார்வை சபையின் தலைவருக்கு அறிவிக்கப்படும். மேற்பார்வை சபை மற்றும் முகாமைத்துவ சபை பொது பங்கேற்பு (இடைவினை) நெறிமுறை ஆவணங்கள் மற்றும் விசேட பங்கேற்பு (இடைவினை) நெறிமுறை ஆவணங்களின் தகவல்கள் ஒழுங்குபடுத்தலை பயன்படுத்திக் கொண்டுள்ளன. இதனூடாக மேற்பார்வை சபை அறிக்கைப்படுத்தலை ஒழுங்குபடுத்தல் மாத்திரமன்றி ஏனைய விடயங்களிடையே மேற்பார்வை சபையின் விசாரணைகள் மற்றும் நிறுவன ஊழியர்கள் தொடர்பான தகவல்களுக்கான கோரிக்கைகளைப் போன்றே கூட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கான தயார்படுத்தல்கள் சம்பந்தமான தகவல்கள் பரிமாற்றத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

முகாமைத்துவ சபையுடன் ஒன்றிணைந்து மேற்பார்வை சபை நீண்டகால பதவியுரிமைத் திட்டமிடலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. முகாமைத்துவ சபை மீதான பல்வகைமையினை ஊக்குவித்தலானது, மேற்பார்வை சபைக்கு மிக முக்கியமானதாக காணப்படுவதுடன், இது, தீவிரமாக கையாளப்படுகின்ற விடயமாகும். முகாமைத்துவ சபைப் பல்வகைமை மீது இது முனைப்புடன் பணியாற்றுகின்றது. எடுத்துக்காட்டாக பாலினம், தேசியம் மற்றும் வயது அதேபோன்று வேறுபட்ட பின்னணிகள் மற்றும் எண்ணப்பாங்குகள் போன்ற நியதிகளில். வங்கியின் முகாமைத்துவ சபை மீதான வெற்றிடம் ஒன்றினை நிரப்புவதற்கு பொருத்தமான அபேட்சகர்களை இனங்காண்பதில் நியமனக் குழு தலைவரின் குழுவுக்கும் மேற்பார்வை சபைக்கும் உதவுகின்றது. அவ்வாறு செய்கையில், குழுவானது, அபேட்சகர் ஒருவரின் விபரத்தொகுப்புடன் பதவி விவரணத்தை தயாரிப்பதுடன், எதிர்பார்க்கப்பட்ட நேர அர்ப்பணிப்பையும் குறிப்பிடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் வெளிவாரி ஆட்சேர்ப்பு ஆலோசகர்களுடனான கூட்டிணைப்புடன் பொருத்தமான அபேட்சகர்கள் இனங்காணப்படுகின்றனர். அத்துடன், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. வெளிவாரி அபேட்சகர்களுடன் இப்பதவி உரிமை திட்டமிடலுக்குப் புறம்பாக முகாமைத்துவ சபையும் மேற்பார்வை சபையும் உள்ளக அபேட்சகர்களின் அட்டவணை ஒன்றைப் பேணுகின்றன. பதவி உரிமைத் திட்டமிடலுக்கான உள்ளக அபேட்சகர்கள் பற்றியும், முகாமைத்துவ சபையின் நோக்கிலிருந்தான செயன்முறை பற்றியும் முகாமைத்துவ சபையிடமிருந்து நியமனக் குழுவும் மேற்பார்வை சபையும் கிரமமாக அறிக்கைகளைப் பெற்றுக்கொள்கின்றன. வெளிவாரி மற்றும் உள்ளக ரீதியாக பொருத்தமான அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதற்காக நியமனக் குழு அறிவுச் சமநிலை மற்றும் பல்வகைமை, முகாமைத்துவ சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் தேர்ச்சிகள் மற்றும் அனுபவம் என்பவற்றை பரிசீலனையில் கொள்கின்றது. முகாமைத்துவ சபை மீதான பல்வகைமையினைப் பேணி வளர்ப்பதற்கும் உதாரணமாக, பாலினம், தேசியம் மற்றும் வயது என்பவற்றைக் கருத்திற் கொள்வதற்கும் இது முனைகின்றது.

நியமனக்குழு பணியினைக் கட்டியெழுப்பி, தலைவரின் குழு மேற்பார்வை சபையின் தீர்மானத்திற்கான பரிந்துரையினைச் சமர்ப்பிக்கின்றது. இதன் அடிப்படையில், மேற்பார்வை சபையானது, முகாமைத்துவ சபை உறுப்பினர்களின் நியமனம் பற்றித் தீர்மானிக்கின்றது. முதல் நியமனக் காலப்பகுதி உயர்ந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கானதாகும். முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் ஒன்று அல்லது பல பதவிக் காலங்களுக்கு நியமிக்கப்படலாம். சட்டத்தை அனுசரித்து, இது உயர்ந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கானதாக அமைந்திருக்கலாம். டொய்ஸ்ச் வங்கியில் அத்தகை நியமனங்கள் பொதுவாக உயர்ந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கானதாக இருக்கும். முகாமைத்துவ சபையின் நியமனத்திற்கான முன்மொழிவுகளுக்குப் புறம்பாக தலைவரின் குழுவும் மேற்பார்வை சபை தீர்மானிக்கின்ற முகாமைத்துவ சபை உறுப்பினர்களை பணிநீக்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்தது.

மேற்பார்வை சபையானது, பங்குத் தொகுதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் 76(3)(அ) பிரிவினை அனுசரித்து, சட்டரீதியாக குறைந்தபட்ச பாலின பங்கேற்றல் தேவைப்படுத்தலுடனான இணங்குவித்தலை உறுதிசெய்கின்றது. இரு பெண்கள் அதாவது, கிறிஸ்டியானா ரிலே மற்றும் ரெபேக்கா ஷோட் உள்ளடங்கலாக 2023 மே 17 வரை 10 உறுப்பினர்களை முகாமைத்துவ சபை, உள்ளடக்கியிருந்தது. கிறிஸ்டினா ரிலே வங்கியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்தார். ஆகையினால், முகாமைத்துவ சபை அப்போதிருந்து 9 உறுப்பினர்களாக அளவைக் குறைத்து ஒரு பெண் உறுப்பினரான ரேபேக்கா ஷோட் என்பவரைக் கொண்டுள்ளது. புதிய முகாமைத்துவ சபை மீதான உள்ளக மற்றும் வெளிவாரி பின்னூட்டலானது, அதன் வினைத்திறன் பற்றிய அங்கீகாரத்தில் பொதுவாக மிகவும் சாதகமாக இருந்து வருகின்றது. எவ்வாறாயினும், 2023 பொதுக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு பெண்களின் எண்ணிக்கையின் தற்போதைய விகிதத்துடன் மேற்பார்வை சபை திருப்தியடையவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் பெண்களின் சதவீத்தினை அதிகரிக்க உத்தேசித்துள்ளது. பொருத்தமான உள்ளக பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு மேற்பார்வை சபையானது, முகாமைத்துவ சபைக்கு நேரடியாக கீழே உள்ள சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளுக்கு பெண்களை நியமிப்பதற்காக தற்போதைய நிதியாண்டுக்கு முகாமைத்துவ சபைக்கான நேரொத்த குறிக்கோள் ஒன்றினை நிர்ணயித்துள்ளதுடன், முகாமைத்துவ சபையின் புதிய உள்ளமைப்பு முறைமையின் நீண்டகால செயலாற்றல் உருவக அணியினுள் அதன் குறிக்கோளை பதியச்செய்துள்ளது. இவ்வகையில் 100மூ அடைவினை எய்துவதற்கு 2026 இறுதியளவில் முகாமைத்துவ சபையின் இரு மட்டங்களுக்கு கீழ் குறைந்தது 32.5மூ பெண்கள் பிரசன்னமாகி இருக்க வேண்டும்.

ஊதியக் கட்டுப்பாட்டு சபையின் முன்மொழிவுகளின் அடிப்படையில் மேற்பார்வை சபையானது, முகாமைத்துவ சபையின் தனிப்பட்ட உறுப்பினர்களின் மொத்த ஊதியத்தை நிர்ணயிப்பதுடன் முகாமைத்துவ சபையின் ஊதிய முறைமை பற்றி கிரமமாக மீளாய்வுசெய்து தீர்மானம் மேற்கொள்கின்றது.

மேற்பார்வை சபை, சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டல்கள் மூலம் குறிப்பாக உபாயம், உத்தேசிக்கப்பட்ட தொழிற் கொள்கை, திட்டமிடல், தொழில் விருத்தி, நற்பெயர் மற்றும் இணங்குவித்தல் தொடர்பில் குழுமம் தொடர்பிலான அனைத்து விடயங்கள் மூலமும் குறித்துரைக்கப்பட்ட நோக்கெல்லையினுள் முகாமைத்துவ சபையிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக்கொள்கின்றது. மேலும், குழும கணக்காய்வு கிரமமாக இனங்காணப்பட்ட எவையேனும் குறைபாடுகள் பற்றி அத்தடன், தீவிரமான குறைபாடுகள் விடயத்தில் வேண்டுமென்ற தாமதமின்றி கணக்காய்வுக் குழுவுக்குத் தெரியப்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, மேற்பார்வை சபையின் தலைவரும் முகாமைத்துவ சபையும் தகவல் கட்டமைப்பு, பொதுவான ஈடுபாட்டு (இடைத் தொடர்பு) நெறிமுறை மற்றும் ஏனைய ஈடுபாட்டு (இடைத் தொடர்பு) நெறிமுறை ஒழுங்குமுறைப்படுத்தல் விடயங்களுக்கு குறிப்பான ஏனைய ஈடுபாட்டு (இடைத்தொடர்பு நெறிமுறை) என்பவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது. இவை, ஏனையவற்றுக்கு மத்தியில் மேற்பார்வை சபைக்கான அறிக்கையிடலை மாத்திரமன்றி மேற்பார்வை சபையின் விசாரணைகள் கம்பனியின் ஊழியர்களிடமிருந்தான தகவலுக்கான கோரிக்கைகள் அதேபோன்று கூட்டங்களுக்காக தயார்படுத்தல் மற்றும் கூட்டங்களுக்கு இடையிலான தொடர்புகளில் தகவல் பரிமாற்றம் என்பவற்றையும் ஒழுங்குமுறைப்படத்துகின்றது.

சில கூட்டங்களின்போது, நியமனக் குழு மற்றும் மேற்பார்வை சபை மேற்பார்வை சபையின் மதிப்பீடு தொடர்பாக கலந்துரையாடுவதுடன் ஜேர்மன் வங்கியில் சட்டத்தின் (KWG) 25 ஆவது பிரிவுக்கமைய சட்டத்தினூடாக விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குறைந்தது வருடந்தம் நடாத்தப்பட வேண்டுமென்பதோடு ஜேர்மன் நிறுவனம்சார் கட்டுப்பாட்டுக் கோவையின் (GCGC) ஈ 12 பிரிவுக்கமைய அது மேற்பார்வைக்குழுவின் சுய மதிப்பீடாகும். மதிப்பீட்டை உறுதியாக நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் கால அட்டவணை 2023 அக்டோபர் 23 ஆம் திகதி மற்றும் 2024 ஜனவரி 31 ஆம் திகதி நியமனக் குழுக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்படும். வெளிவாரியான ஆலோசகர் ஒருவரின் சேவை இந்த சந்தர்ப்பத்தில் கட்டாயமில்லை.

மேற்பார்வை சபையின் குழுக்கள்

மேற்பார்வைச் சபையானது பின்வரும் எட்டு நிலையான குழுக்களை அமைத்துள்ளது. அவையாவன - தலைவரின் குழு, நியமனக் குழு, கணக்காய்வுக் குழு, ஆபத்துக் குழு, ஒழுங்குபடுத்தல் குழு (இதற்கு முன்னர் ஒன்றிணைந்த குழு) ஊதியக் கட்டுப்பாட்டுக் குழு, மூலோபாயம் மற்றும் பேண்தகு குழு (இதற்கு முன்னர் மூலோபாயக் குழு) மற்றும் தொழில்நுட்பம், தரவுகள் மற்றும் புத்தாக்கக் குழு என்பனவாகும். இக் குழுக்கள் தேவையான அளவுக்கும் தேவையான நேரங்களிலும் தமது பணிகளை ஒருங்கிணைப்பதுடன் தமக்கிடையே ஆலோசனைகளையும் நடத்துகின்றன. குழுக்களின் பணிகள் சம்பந்தமாக குழுக்களின் தலைவர்கள் கிரமமான முறையில் மேற்பார்வைச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள். நிலையியற் குழுக்களின் பணிகள் மற்றும் மேலதிக தகவல்கள் தனியான குறிப்பு விதிமுறைகளினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. அதன் தற்போதைய பிரதியை டொயிஸ் வங்கியின் வலைதளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். (www.db.com/ir/en/documents.htm).

தலைவரின் குழு

குழுவின் உறுப்பினர்கள் - அலெக்சாண்டர் வைனென்ட்ஸ், தலைவர், ரிமோ ஹெய்டர் (2023 மே 17 தொடக்கம்), டெட்லெ.ப் பொலாஷெக் (2023 மே 17 வரை), ஃபிராங்க் வெர்னெக் (2023 மே 17 வரை, பேராசிரியர் டொக்டர் நோர்பர்ட் வின்கெல்ஜோஹான்.

தலைவரின் குழு மேற்பார்வைச் சபையின் கூட்டங்களை ஆயத்தம் செய்தல் மேற்பார்வைச் சபையின் கூட்டங்களுக்கிடையே தற்போதைய வர்த்தகங்களை வழிநடாத்தல், முகாமைத்துவச் சபைக்கான நீண்டகால பதவி மாற்று ஒழுங்கைத் திட்டமிடுதல் உட்பட முகாமைத்துவச் சபை உறுப்பினர்களின் நியமனம் மற்றும் பதவிநீக்கம் தொடர்பாக மேற்பார்வைச் சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆயத்தம் செய்தல் முகாமைத்துவச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியத்தைத் தீர்மானிப்பதற்கு மேற்பார்வைச் சபை கொண்டுள்ள தனி அதிகாரத்தினுள் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் ஓய்வூதிய உடன்படிக்கைகளை முடிவுறுத்தல், திருத்துதல் மற்றும் பணிக்கொடை மற்றும் படிகள் கட்டுப்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கொள்ளல் முகாமைத்துவச் சபையின் அங்கத்தவராகப் பெயர் குறிப்பிடப்படும் டொயிஷ் வங்கி AG இன் பொது முகாமையாளருக்கான (Generalbevollmächtigter) ஒப்பந்தங்கள் மற்றும் கூ அல்லது ஒப்பந்தங்களுக்கான திருத்தங்கள் சம்பந்தமான கருத்தொன்று தேவையான சந்தர்ப்பங்களில் வெளியிடல், ஸ்டொக் கோப்பரேஷன் சட்டத்தின் 112 ஆவது பிரிவுக்கேற்ப முகாமைத்துவச் சபையின் தற்போதைய மற்றும் முன்னைய உறுப்பினர்களுடனான ஏனைய ஒப்பந்த வர்த்தகங்களை வழிநடாத்தல், முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள் டொயிஷ் வங்கிக் குழுமத்திற்கு வெளியே கொண்டிருக்கும் ஆணையளிப்புகள், கௌரவப் பதவிகள் மற்றும் விசேட பணிப் பொறுப்புகளை அங்கீகரிப்புடன் நியமனக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் என்பன இக் குழுவின் முக்கிய பொறுப்புகளாகும். முகாமைத்துவச் சபையின் தலைவர் மற்றும்ஃஅல்லது பிரதம இடர் அதிகாரி ஏதேனும் நலன் முரண்பாட்டைக் கொண்டிருந்தாலன்றி. அவர்களின் ஆலோசனையுடன் முகாமைத்துவ உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட இரகசிய உள்ளகத் தரவுகள் கையளிக்கப்படுவதை அங்கீகரித்தல் ஜேர்மன் ஸ்டொக் கோப்பரேஷன் சட்டத்தின் 114ஆவது பிரிவுக்கேற்ப மேற்பார்வைச் சபை உறுப்பினர்களுடனான ஒப்பந்தங்களை அங்கீகரித்தல் நிறுவன ஆளுகைத் துறையில் மேற்பார்வைச் சபையின் தீர்மானங்களுக்கு ஆயத்தம் செய்தல், மாற்றமடைந்த உண்மைச் சூழல்களை அனுசரிக்கும் வகையில் வருடாந்தப் பிரதானத்தின் சீராக்கம் குறித்து மேற்பார்வைச் சபையின் சார்பில் தீர்மானம் எடுத்தல் அனுசரிப்புக் பிரதானத்தின் இணக்கப்பாட்டை ஊர்ஜிதம் செய்தல் என்பனவும் இக் குழுவின் பொறுப்புகளாகும். கணக்காய்வாளர்கள், நிபுணர்கள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் ஏனைய வெளியிட ஆலோசகர்களுடனான ஆலோசனைகள் தொடர்பில் மேற்பார்வைச் சபைக்கும் அதன் குழுக்களுக்கும் ஏற்படும் செலவுகளைக் கருத்திற்கொள்ளுதல் மற்றும் தேவையான இடத்தில் அபிப்பிராயம் வெளியிடுதல் சேதங்களுக்கான உரிமைக் கோரல்களை முன்னெடுப்பது தொடர்பில் அல்லது முகாமைத்துவச் சபையின் தற்போய அல்லது முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக வேறேதும் நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் மேற்பார்வைச் சபையில் தீர்மானங்களுக்காகப் பரிந்துரைகளைத் தயாரித்தல் என்பனவும் இக் குழுவின் பணிகளுள் அடங்கும். தலைவரின் குழு தேவையான வேளைகளில் ஒழுங்குபடுத்தல் குழுவின் தலைவரிடமிருந்து நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும்.

நியமனக் குழு

குழுவின் உறுப்பினர்கள் - அலெக்சாண்டர் வைனென்ட்ஸ், தலைவர், மேரி கிளார்க், டிமோ ஹெய்டர் (2023 மே 17 தொடக்கம்), டெட்லெ.ப் பொலாஷெக் (2023 மே 17 வரை), ஃபிராங்க் ஷுல்ஸ் (2023 மே 17 தொடக்கம்), ஃபிராங்க் வெர்னெக் (2023 மே 17 வரை, பேராசிரியர் டொக்டர் நோர்பர்ட் வின்கெல்ஜோஹன்.

வங்கியின் முகாமைத்துவச் சபைப் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பதாரிகளை அடையாளம் காண மேற்பார்வைச் சபைக்கு உதவுவது இக் குழுவின் பிரதான பொறுப்பாகும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டு, குழு முகாமைத்துவ சபையின் அனைத்து அங்கத்தவர்களின் அறிவு, திறமை மற்றும் அனுபவம் பற்றிய சமநிலை மற்றும் பல்வகைமையை கவனத்திற்கொண்டு விண்ணப்பதாரியின் விபரத்துடன் பதவி தொடர்பான விபரத்தை தயாரித்து அலுவலுடன் தொடர்பான காலம், முகாமைத்துவ சபையின் பதில் திட்டம் சம்பந்தமாக விசேட கவனத்தைச் செலுத்தி திறன் விருத்தி மற்றும் பல்வகைமை விருத்தி, மேற்பார்வை சபையில் குறைவான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பாலின சமத்துவத்தை (பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்) விருத்தி செய்வதனை நோக்காகக் கொள்ளுதலைப் போன்றே இதனை அடைந்து கொள்ளும் மூலோபாயமாக மேற்பார்வை சபை குழுக்களுக்கு நியமிப்பதற்காக முன்மொழிவுகளை அபிவிருத்தி செய்தல், டொயிஸ் வங்கி AG ன் முகாமைத்துவ சபையின் மற்றும் மேற்பார்வை சபையின் தொழில் தகைமை, நம்பகத்தன்மை மற்றும் பெற்றுக்கொள்ள முடியுமான காலம் மற்றும் கூட்டு மதிப்பீட்டிற்கான வழிகாட்டலை தயாரித்தலைப் போன்றே (“Suitability Guideline”) தகுதிநிலை வழிகாட்டுதல்களில் முகாமைத்துவச் சபை மற்றும் மேற்பார்வைச் சபையின் அமைப்பு, அளவு, நடப்பெண் மற்றும் செயலாற்றுகை சம்பந்தமாக குறைந்தது வருடத்திற்கொரு தடவையாவது நடாத்தப்பட வேண்டிய மதிப்பீட்டின் பயன்பெறு தன்மையை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இது சம்பந்தமாக கூட்டாக முகாமைத்துவ சபையின் மற்றும் மேற்பார்வை சபையின் போன்றே குறித்த நிறுவன உறுப்பினர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம் தொடர்பிலும் குறைந்தது வருடத்திற்கொரு முறை நடாத்தப்பட வேண்டிய மதிப்பீடு தொடர்பாக மேற்பார்வை சபைக்கு பரிந்துரைத்தல் மற்றும் தகுதிநிலை வழிகாட்டுதல்களின் விவரக் குறிப்புக்களுக்கமைய ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சபையின் மற்றும் மேற்பார்வை சபையின் போன்றே ஏற்புடைய நிறுவனங்களின் அங்கத்தவர்களின் மதிப்பீடு, முகாமைத்துவ மட்டத்திற்கு கீழுள்ள பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்தல் மற்றும் நியமித்தலுக்கான முகாமைத்துவச் சபையின் கோட்பாடுகள் சம்பந்தமான மீளாய்வு மற்றும் பரஸ்பர ரீதியில் இணக்கம் காணப்பட்ட நியமனமொன்றை சமர்ப்பித்தல் ஊடாக இரண்டாவது பிரதித் தலைவரை தெரிவு செய்தல் சம்பந்தமான தீர்மானம் தொடர்பாக முகாமைத்துவச் சப